**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)**
**VANIYAMBADI**

## PG & RESEARCH DEPARTMENT OF TAMIL

## II B.A., TAMIL – SEMESTER – 1V

## E-NOTES (STUDY MATERIAL

| |
|---|
| C - Course - 2 **நன்னூல்**<br>Code : **23UTA42** |
| Unit : 5 உரியியல் |
| Learning Objectives :<br>இடைச்சொற்கள் உரிச்சொற்கள் ஆகியவை மொழியின் கட்டமைப்புக்கு இன்றியமையாதவை என்பதை அறிந்திருத்தல் |
| **Coures Outcome:**<br>இடைக்கால இலக்கியங்களின் மொழி அமைப்பைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பர். |

**Overview**

நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வருவது உரிச்சொல் ஆகும். பெயர், வினைச்சொற்களின் பண்மை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதால் உரச்சொல் என்று கூறுவர். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்குத் அவ்உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறும் இவ்வியல் 21 நூற்பாக்களைக் கொண்டது.

அலகு - : : 5 உரியியல்

உரிச்சொல் என்பது ஒன்றுக்கு ஒன்று உரிமை உடையதாக விளங்கும் சொல். (உரி+சொல் ஒன்றிக்கு உரிமை உடைய சொல்) ஒரு சொல்லானது பலபொருள் தருவதாகவும், பல சொல் ஒரு பொருள் தருவதாகவும் அமைவது உரிச்சொல். இது, பெயர்ச் சொல்லாகவோ, வினைச் சொல்லாகவோ, பெயருக்கு அடைமொழியாகவோ, வினைக்கு அடைமொழியாகவோ வரும். பெயருக்கும், வினைக்கும் பொதுவானதாகவோ இருக்கும்.

உரிச்சொல் வகைகள்

1. ஒரு பொருள் குறித்த பலஉரிச்சொல்
2. பல பொருள் குறித்த ஓர் உரிச்சொல்.
3. ஒரு பொருள் குறித்த பலஉரிச்சொல்:

- சாலப் பேசினான்.
- உறு புகழ்.
- தவ உயர்ந்தன.
- நனி தின்றான்.

இந்த நான்கிலும் வரும் "சால, உறு, தவ, நனி" என்னும் உரிச்சொற்கள் "மிகுதி" என்னும் ஒரே பொருளை உணர்த்துவன ஆகும்

பல பொருள் குறித்த ஓர் உரிச்சொல்:

- கடிமனை - காவல்
- கடிவாள் - கூர்மை
- கடிமிளகு - கருப்பு
- கடிமலர் - சிறப்ப

இந்த நான்கிலும் வரும் "கடி" என்னும் உரிச் சொல் "காவல், கூர்மை, கரிப்பு, சிறப்பு முதலிய பல பொருள்களை உணர்த்துகின்றன.

## உரிச்சொல்

உரிச்சொல் என்பதை உரி + சொல் எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். உரி என்பது உரிய (உரிமை) என்ற பொருளைத் தருவதாகும். உரிச்சொல் எதற்கு உரியது என்றால் செய்யுளுக்கு உரியதாகும். உரிச்சொற்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கில் பயின்று வராத சொற்களாகும்.

உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் உரிய சொல் என்றும் கூறுவார்கள். உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் அடையாக வருவதோடு அவற்றின் பண்பையும் விளக்கி நிற்கும்.

### 4.1.1 உரிச்சொல்லின் பொது இலக்கணம்

உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை நன்னூலார்,

பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி
ஒரு குணம் பலகுணம் தழுவிப் பெயர் வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்

என்று தமது நன்னூலில் (நூற்பா 442) குறிப்பிடுகின்றார். உரிச்சொல் என்பது பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயர் ஆகும். ஒரு சொல் ஒரு பண்பை உணர்த்தலாம்; ஒரு சொல் பல பண்புகளையும் உணர்த்தலாம். உரிச்சொல், பெயர்ச்சொற்களோடும் வினைச்

சொற்களோடும் சேர்ந்து அவற்றின் பண்பை உணர்த்த வரும். உரிச்சொல் செய்யுளுக்கு உரிய சொல்லாக வரும்.

எடுத்துக்காட்டு:

நனி பேதை

நனி எனும் உரிச்சொல் பேதை எனும் பெயர்ச் சொல்லோடு சேர்ந்து வந்தது.

நனி = மிகுதி, பேதை = அறிவற்றவன்

சாலத் தின்றான்

சால எனும் உரிச்சொல் தின்றான் எனும் வினைச்சொல்லோடு சேர்ந்து வந்தது.

சால = மிகவும்

மல்லல் ஞாலம்

மல்லல் எனும் உரிச்சொல் வளம் எனும் ஒரு பண்பை உணர்த்தும்.

கடி மலர்

கடி நகர்

கடி எனும் உரிச்சொல் முறையே மணம் மிக்க மலர்.

காவல் மிக்க நகர் எனப் பல பண்புகளை உணர்த்துகிறது.

உரிச்சொல் உணர்த்தும் பண்புகள்

உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் இரண்டு ஆகும்.

அவை :

1.குணப் பண்பு

2.தொழிற் பண்பு

உரிச்சொல் பல்வேறு பண்புகளை உணர்த்தும் என முன்னர்க் கண்டோம். அவற்றுள் பொருளின் பண்புகளை உணர்த்துவது குணப்பண்பு ஆகும்.

எடுத்துக்காட்டு:

மாதர் வாள் முகம்

இங்கு மாதர் எனும் உரிச்சொல் விருப்பம் எனும் குணத்தை உணர்த்துகிறது.

(மாதர்= விரும்பத்தக்க, வாள் முகம் = ஒளிமிக்க முகம்)

இமிழ் கடல்

இங்கு இமிழ் எனும் உரிச்சொல் ஒலித்தல் எனும் தொழிற்பண்பை உணர்த்துகிறது.

2 உயிர்ப்பொருள், உயிர் அல்லாத பொருள்

உரிச்சொல்லின் பொது இலக்கணத்தைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள். இனி உயிர் உடைய மற்றும் உயிர் அற்ற பொருள்களின் விளக்கங்களைக் காண்போம்.

## உயிர் உடைய மற்றும் உயிர் அற்ற பொருள்களின் பகுப்பு

ஓரறிவு உயிர் முதலாக ஐந்து அறிவு உயிர் ஈறாக உள்ள அனைத்தும் உயிர் உடைய பொருள்கள் ஆகும். இலக்கண நூலார் உயிர்களை ‘அறிதல் உணர்வு’ அடிப்படையில் பகுத்துள்ளனர். மெய்யால் அதாவது உடம்பால் உற்று உணரும் உணர்ச்சி மட்டுமே கொண்ட உயிரினங்கள் ஓரறிவு உடையவாகும். மெய்யோடு நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐம்பொறிகளாலும் அறியும் ஆற்றலுடைய மனித உயிர்களை ஐந்து அறிவு உடையவாகும் என்கிறார் நன்னூலார். தொல்காப்பியர் மனம் என்பதையும் ஓர் அறிவாகக் கொண்டு அதனை ஆறாவது அறிவு என்று கூறுகின்றார்.

உயிர் இல்லாத உடம்பு முதலான உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிர் அற்ற பொருள்களாகும்.

இதுவரை உயிர் உடைய மற்றும் உயிர் அற்ற பொருள்களின் பகுப்பு முறையை அறிந்து கொண்டீர்கள். இனி அவ்விரு பொருள்களின் வகைகளை விரிவாகக் காண்போம்.

### உயிர் உடைய பொருள் வகைகள்

உயிர் உடைய பொருள்களை ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளார்கள் என்பதை முன்னரே கண்டோம். இப்பகுதியில் ஐந்து வகை உயிர்களையும் விளக்கமாகப் பார்ப்போம்.

• ஓர் அறிவு உயிர்

மெய் அதாவது உடம்பால் தொடுதல் உணர்வை மட்டுமே உடைய உயிர்கள் ஓர் அறிவு உயிர்கள்.

எடுத்துக்காட்டு: செடி, கொடி, புல், மரம்

• ஈரறிவுயிர் (இரண்டு அறிவு உயிர்)

மெய் உணர்வோடு, சுவை அறியும் நாக்கு உடையவை இரண்டு அறிவு உடைய உயிர்களாகும்.

எடுத்துக்காட்டு: சிப்பி, சங்கு

• மூவறிவுயிர் (மூன்று அறிவு உயிர்)

மெய், நாக்கு ஆகியவற்றோடு நாற்றத்தை (வாசனை) அறியும் மூக்கு உடையவை மூன்று அறிவு பெற்ற உயிர்கள்.

எடுத்துக்காட்டு: கறையான், எறும்பு

• நாலறிவுயிர் (நான்கு அறிவு உயிர்)

மெய், நாக்கு, மூக்கு ஆகியவற்றோடு காணும் ஆற்றல் பெற்ற கண் உடைய உயிர்கள் நான்கு அறிவு பெற்றவை.

எடுத்துக்காட்டு: தும்பி, வண்டு

• ஐயறிவுயிர் (ஐந்து அறிவு உயிர்)

மெய், நாக்கு, மூக்கு, கண் ஆகியவற்றோடு கேட்கும் திறனுடைய செவி உடைய உயிர்கள் ஐந்தறிவு பெற்றவையாகும்.

எடுத்துக்காட்டு: விலங்குகள், பறவைகள், மனிதர்

இவ்வாறு ஐந்து வகைகளாக உயிர்ப் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உயிர் உடைய பொருள்களின் பண்புகள்

இப்பகுதியில் உயிர் உடைய பொருள்களின் பண்புகள் விளக்கப்படுகின்றன. அதாவது, உயிர் உடைய பொருள்களின் பொதுவான குணங்களும் அவற்றிற்கு உரிய தொழில் பண்புகளும் (செய்கைகள்) விளக்கப்படுகின்றன.

உயிர் உடைய பொருள்களின் குணப்பண்புகள்

உடம்போடு கூடிய உயிர்களின் குணங்கள் 32 என்று குறிப்பிடுகின்றார் நன்னூலார் (நூற்பா 452). அவையாவன: அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறைவு, பொறை, (பொறுமை) ஓர்ப்பு (தெளிவு), கடைப்பிடி, மையல் (மயக்கம்), நினைவு, வெறுப்பு, உவப்பு (மகிழ்வு), இரக்கம், நாண், வெகுளி (கோபம்), துணிவு, அழுக்காறு (பொறாமை), அன்பு, எளிமை, எய்த்தல் (சோர்வு), துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல் (பகை), வென்றி (வெற்றி), பொச்சாப்பு (பொல்லாங்கு), ஊக்கம், மறம், மதம் (வெறி), மறவி (மறதி) ஆகிய இவையும் இவை போன்ற பிறவும் உயிர்களின் பண்புகளாகும்.

## உயிர் உடைய பொருள்களின் தொழில் பண்புகள்

உயிர் உடைய பொருள்களின் தொழில் பண்புகள் (குணங்கள்) ஐந்து. அவையாவன:

துய்த்தல் (அனுபவித்தல்), துஞ்சல் (தூங்குதல்), தொழுதல், அணிதல், உய்த்தல் (பிழைத்தல்) ஆகிய இக்குணங்கள் ஐந்தும் எல்லா உயிர் உடைய பொருள்களுக்கும் பொதுவானவையாகும். (நன்னூல், 453)

இனி உயிர் அற்ற பொருள்களின் பண்புகளையும் உயிர் உடைய மற்றும் உயிர் அற்ற பொருள்களுக்கு உரிய பொதுவான தொழில் பண்புகளையும் பார்ப்போம்.

## உயிர் அல்லாத பொருள்களின் குணப் பண்புகள்

உயிர் அல்லாத பொருள்களின் பண்புகள் வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவங்களும், நறுநாற்றம், துர்நாற்றம் என்னும் இரு நாற்றங்களும், வெண்மை, செம்மை (சிவப்பு), கருமை, பொன்மை (மஞ்சள்), பசுமை என்னும் ஐந்து வண்ணங்களும், கைப்பு (கசப்பு), புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு (காரம்), இனிப்பு என்னும் ஆறு சுவைகளும், வெம்மை (வெப்பம்), தண்மை (குளிர்ச்சி), மென்மை, வன்மை, நொய்மை (நைதல்), திண்மை, இழுமெனல் (வழவழப்பு), சருச்சரை (சொரசொரப்பு) என்னும் எட்டு ஊறுகளும் (தொடு உணர்வுகளும்) உயிர் அற்ற பொருள்களின் பண்புகளாகும். (நன்னூல், 454)

உயிர் உடைய மற்றும் உயிர் அற்ற பொருள்களின் பொதுவான தொழில் பண்புகள்

உயிர் உடைய பொருள்களுக்கும் உயிர் அற்ற பொருள்களுக்கும் உரிய பொதுவான தொழில் பண்புகளை இங்கே காண்போம். உலகில் தோன்றியுள்ள எல்லாப் பொருள்களுமே ஒன்பது பண்புகளைக் கொண்டிருக்கும். (நன்னூல், 455)

'தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்பன எல்லாவற்றிற்கும் பொதுவானவையாகும்.

இசைத்தல் = ஒலித்தல்

எடுத்துக்காட்டு:

'பிள்ளை பிறந்தான்' - தோன்றல் எனும் தொழில் பண்பு

பிள்ளை எனும் உயிர்ப்பொருளுக்கு வளர்தல் போன்ற ஏனைய தொழில் பண்புகளும் பொருந்தி வருவதைக் காணுங்கள்.

அடுத்து, உயிர் அற்ற பொருள்களுக்கும் மேற்கூறியுள்ள பண்புகள் உள்ளன என்பதைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

எடுத்துக்காட்டு:

பிறை தோன்றிற்று - தோன்றல் எனும் தொழிற்பண்பு
மழை கொடுத்தது - ஈதல் எனும் தொழிற்பண்பு

தொகுப்புரை

இப்பாடம் உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குகிறது. உரிச்சொற்கள் செய்யுளுக்கு உரியன என்றும் அவை பெயர், வினைகளைத் தழுவி வருபவை என்றும் தெரிவிக்கிறது. குணப்பண்பு, தொழிற்பண்பு எனும் பண்புகளை உணர்த்தும் தன்மை உடையவை உரிச்சொற்கள். அவ்வாறு உணர்த்தும்போது ஒரு பொருள் குறித்த பல சொல் எனவும் பல பொருள் குறித்த ஒரு சொல் எனவும் இருவகைப்படும்.

உயிர் உடைய பொருள்களின் வகைகளையும் அவற்றின் குணப்பண்புகளையும் தொழில் பண்புகளையும் தெளிவாக்கியிருக்கிறது. உயிர் அற்ற பொருள்களின் குணப்பண்புகளையும், உயிர் உடையது மற்றும் உயிர் அற்றது ஆகிய இருபொருள்களுக்கும் பொதுவான தொழில் பண்புகளையும் இப்பாடம் விளக்கியிருக்கிறது.

வினாக்கள்

1. எவற்றின் அடிப்படையில் உயிர்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன?

2. ஓரறிவு உயிர்கள் யாவை?

3. ஈரறிவு உயிர்களுக்குரிய பொறிகளைக் குறிப்பிடுக.

4. மூவறிவு உயிர்கள் யாவை?

5. தும்பி, வண்டு போன்றவை எத்தனை அறிவுடையவை?

6. ஐயறிவு உயிர்களுக்குச் சான்று தருக.

7. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் யாவை?

8. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்கள் எத்தனை?

9. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் புலப்படுத்துக.

10. உயிர்ப்பொருள்களின் இருவகைப் பண்புகள் யாவை?

11. உயிர்ப் பொருள்களின் குணப்பண்புகள் எத்தனை?

12. உயிர்ப் பொருள்களின் தொழில் பண்புகள் யாவை?

13. ஆறுசுவைகளும் எவ்வகைப் பொருளின் குணப்பண்புகள்?

14. இருபொருள்களுக்கும் பொதுவான தொழில் பண்புகள் யாவை?

15. உயிர் அல்லாத பொருள்கள் எவை?